**09.02.2026**

அ.வ.எண். **217/2014**

<u>வா.சா.**1** செந்தில்நாதன், **1**ம் பிரதிவாதி (Party- in- person) தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**1**. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். பொதுவாக பத்திர செலவு யார் செய்வார்கள் என்றால் வாங்குபவர்கள் தான் செலவு செய்வார்கள். தாவாசொத்தை நான் கிரையம் வாங்குவதற்கு கிரைய தொகை ரூ.**50,23,000/-** கொடுத்துள்ளேன் என்று பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் கிரையம் பத்திர பதிவில் கிரைய தொகை **9,99,000/-** என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குறைவான மதிப்பீட்டை காட்டி கிரைய பத்திரம் பதிவு செய்தது தவறு என்றால் சரியல்ல. நான் அரசு மதிப்பீட்டு வழிகாட்டிபடி பதிவு செய்துள்ளேன்.

**2**. தாவாசொத்தில் மொத்தம் எத்தனை வீட்டு மனைகளாக பிரித்தோம் என்றால் ஞாபகமில்லை. தாவாசொத்தை முழுமையாக விற்பனை செய்துவிட்டோமா என்றால் **80** முதல் **90** சதவீதம் வரை வீட்டு மனைகளை விற்று விட்டோம், மீதம் உள்ள வீட்டு மனைகளை விற்பதற்க்குள் **1**ம் பிரதிவாதி தரப்பில் குற்றவியல் வழக்கு தொடுத்ததால் விற்பனை செய்யவில்லை. மேற்சொன்ன குற்றவியல் வழக்கில் நான் **5**ம் குற்றவாளியாக உள்ளேன் என்றால் நான் அதை ஒப்பு கொள்ளமாட்டேன். அந்த குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் மாண்புமிகு

உச்சநீதிமன்றம் உத்தரவின்படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனது பிரமாணவாக்குமூலத்தில் **90** சதவீதமான வீட்டு மனைகளை விற்று விட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தின் மொத்த விஸ்தீரணம் **10** ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான்.

**3.** தாவாசொத்தில் ஏற்படுத்திய வீட்டு மனைகளை மூன்று மாதத்திற்குள் விற்பனை செய்து முன் தொகை பெற்றுவிட்டோம் பின்பு பத்திர பதிவு செய்து கொடுத்தோம். **2011**ம் வருடத்திற்கு முன்பே **90** சதவீதம் மனைகளை விற்று விட்டேன் என்றால் சரிதான். அதன்பின்பு குற்றவியல் வழக்கு பதிவு செய்ததால் விற்கவில்லை. அதன்பின்பு **3** வருடம் கழித்து இந்த வழக்கை **2014**ம் வருடம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் **1**ம் பிரதிவாதி தரப்பில் என் அனுபவத்தை இடையூறு செய்ததால் நான் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**4**. எனது பிராதில் **2014**ம் வருடம் எவ்வளவு விஸ்தீரணம் நிலம் என் கைவசம் இருந்தது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தின் மொத்தம் விஸ்தீரணம் **9** ஏக்கர் **99** செண்டிற்கான தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான், என்னுடைய கிரையதாரர்களுக்கும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பிராது பரிகாரத்தில் கிரையதாரர்களுக்கும் சேரத்து பரிகாரம் கேட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் **2014**ம் வருடம் இந்நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**5**. ஏற்கனவே  தாவாசொத்து சம்பந்தமாக அசல் வழக்கு எண்.**78/2010** என்ற வழக்கை மதுராந்தகம், சார்பு நீதிமன்றத்தில் பாக பிரிவினைக்காக தாக்கல் செய்து எனக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது. அந்த வழக்கில் என் தரப்பில் உரிய தரப்பினரை சேர்ப்பதற்காக மனு செய்துள்ளேனா என்றால் சரிதான். அந்த மனு பல வருடங்களுக்கு முன்பு தள்ளுபடி செய்யபட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த மனுவை எதிர்த்து நான் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, மேல்முறையீடு தாக்கல் செய்ய போகிறோம்.

**6**. நான் **6**ம் பிரதிவாதி மோகன்தாஸிடமிருந்து தாவாசொத்தை வா.சா.ஆ.**1**ன் மூலம் கிரையம் பெற்றேனா என்றால் சரிதான். வா.சா.ஆ.**1** ஆவணம் மதுராந்தகம், சார்பு நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.**78/2010** என்ற வழக்கில் ரத்து செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன வா.சா.ஆ.**1** ஆவணம் ஏற்கனவே ரத்து செய்யபட்டதால் எனக்கும் எனது கிரையதாரர்களுக்கும் அதில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல, நான் அதை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்போகிறேன்.  அசல் வழக்கு எண்.**78/2010** வழக்கில் நான் மேல்முறையீடு செய்ய முடியாது என்றால் சரியல்ல.

**7.** தாவாசொத்தில் எந்த பகுதி என் கைவசம் விற்பனை செய்யாமல் உள்ளது என்று குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை நீதிமன்றம் மற்றும் எதிர்மனுதாரர் நேரத்தை வீணாக்குவதற்கு ஏற்படுத்தபட்டது என்றால் சரியல்ல. எனவே உரிமையியல்

நடைமுறை சட்டம் பிரிவு 35 ன் கீழ் அபராதம் விதிக்கபடவேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கை முழு சொத்திற்கும் சேர்த்து தாக்கல் செய்ததால் இந்திய தண்டனை சட்டம் பிரிவு. 191 மற்றும் 193 தண்டிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்ததால் அபராதத்துடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.